# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டு தரநிர்ணயக்குழுவின் மதிப்பீட்டில் ‘A+’தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

## பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி–620024

**தொலைபேசி : 0431- 2407016/ 2407060**
**தொலை நகலி: 0431 - 2407444**

**முனைவர் சு.சீனிவாசராகவன்,**எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்ஸி., பிஎச்.டி., **மின்னஞ்சல்: coe@bdu.ac.in**
**தேர்வு நெறியாளர் (பொ)** **வலைதளம் : www.bdu.ac.in**


---

**<u>ந.க. எண்: தே.நெ.அ. /இளநிலைப்பட்டம்/நவம்பர் 2023/தேர்வுகள் /2023 நாள்: 26.09.2023</u>**

பெறுபவர்
முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் (தன்னாட்சி பெறாத கல்லூரிகள்)

அய்யா/அம்மையீர்,

<u>பொருள்:</u> தேர்வுப் பிரிவு - நவம்பர் 2023 இளநிலை மாணவர்களுக்கான தேர்வுகள் பருவப்பாடக்குறியீடுகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வு துவங்கும் நாள் அறிவித்தல் - தொடர்பாக.

<u>பார்வை</u>: துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்: 26-09-2023

- - -

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் நவம்பர் 2023-க்கான இளநிலை தேர்வுகள் 20-11-2023 (திங்கள் கிழமை) அன்று துவங்கவும், பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் (தன்னாட்சி தவிர - Autonomous) இருந்து மாணாக்கர்களின் பருவப் பாடக்குறியீடுகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான தகவல்களை தேர்வு இணையதள முகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்யவும் மற்றும் உரிய நேரத்தில் தேர்வுகள் துவங்குவதற்கும் வரையறை செய்யப்பட்ட, வரைவுத் தேர்வுக் கால அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. நடப்புப் பருவம் மற்றும் நிலுவைத் தாள்களுக்கான தேர்வு கட்டணத்துடன் பட்டியல்கள் மற்றும் விண்ணப்பங்கள் சமர்பிக்கப்பட வேண்டிய நாள் :

| வ. எண் | விவரங்கள் | | நாள் மற்றும் கிழமை |
|---|---|---|---|
| 1. | தேர்விற்குரிய விவரங்கள் மற்றும் கட்டணத்தை மாணாக்கர்களிடமிருந்து பெற்று பதிவேற்றம் செய்ய **கடைசி நாள்** | : | **13.10.2023 வெள்ளிக் கிழமை** |
| 2. | தேர்விற்குரிய விவரங்கள் மற்றும் கட்டணத்தை மாணாக்கர் களிடமிருந்து **தண்டத்தொகையுடன் ரூ.300 + 18% GST** பெற்று பதிவேற்றம் செய்ய **கடைசி நாள்** | : | **18.10.2023 புதன் கிழமை** |
| 3. | 18.10.2023-க்குப் பிறகு **கூடுதல் தண்டத்தொகையுடன் (ரூ.300+18% GST +500) உடன்** மாணாக்கர்களின் தேர்வுக் கட்டண விவரப்பட்டியல் வங்கி ரசீது மற்றும் வருகைப்பதிவு சான்றிதழுடன் **பதிவேற்றம் செய்திட கடைசி நாள்** | : | **21.10.2023 சனிக்கிழமை** |
| 4. | நவம்பர் 2023-ற்கான தேர்வு விண்ணப்பங்கள் பல்கலைக்கழக இணையமுகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்ய கடைசி நாள் அதற்கு பின்னர் தேர்வு விண்ணப்பங்கள் எக்காரணத்ததை கொண்டும் பரிசீலிக்க இயலாது. | : | **26.10.2023 வியாழன் கிழமை** |
| 5. | மாணாக்கர்களின் வருகைப்பதிவு தொடர்பான (Condonation) படிவங்கள், உரிய கட்டண விவரங்கள் மற்றும் அனைத்துவித படிவங்களையும் பல்கலைக்கழகத்திற்கு நேரில் சமர்பிக்க வேண்டிய நாள் | | **27.10.2023 வெள்ளிக்கிழமை** |
| 6. | **கல்லூரி மூலம் தேர்வு விண்ணப்பங்களை நேரடியாக அனுப்ப வேண்டியவர்கள்** | | |
| | 6.1 2021-க்கு முன்னர் கல்லூரியை முடித்து, நிலுவைத் தாள்கள் உள்ளவர்கள் | | |
| 7. | **பல்கலைக்கழக இணையமுகப்பு மூலம் (Portal) பதிவேற்றம் செய்ய வேண்டியவர்கள்** | | |
| | 7.1 மறுசேர்க்கை (Re-admission), மீளச்சேர்க்கை (Re-do) பெற்றுள்ளவர்கள் பதிவேற்றம் செய்யவும் | | |
| | 7.2 தொலைக்கல்வி மையம், தன்னாட்சி கல்லூரிகள் மற்றும் பிற பல்கலைக் கழகங்களிலிருந்து மாற்றுச் சேர்க்கை **(Transfer admission)** பெற்றவர்கள் பதிவேற்றம் செய்யவும் | | |
| | **7.1 மற்றும் 7.2இல் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யும் பொழுது பதிவாளரின் அனுமதிக் கடிதம் மற்றும் கூடுதல் தாள்கள், மாற்றுத் தாள்கள் ஆகியவற்றின் கடித நகல்களுடன் மாணவர்களது செய்முறை மற்றும் எழுத்துத்தேர்வினற்கான <u>அகமதிப்பெண்களையும் கண்டிப்பாக</u> பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.** | | |
| 7. | **இளநிலைத் தேர்வுகள் துவங்கும் நாள்** | : | **20.11.2023 திங்கள் கிழமை** |

மேலும், 2023-இல் சேர்க்கை பெற்ற மாணாக்கர்கள் பற்றிய சுயவிவரங்களையும், (Bio-data) பாடக்குறியீட்டு (Subject code) விவரங்களையும், 2022 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் சேர்க்கை பெற்ற மாணாக்கர்களின் நடப்பு மற்றும் நிலுவைத்தாள்களின் பாடக்குறியீட்டு (Subject code) விவரங்களையும் தேர்வு இணைய முகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பல்கலைக்கழக தேர்வு இணைய முகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்யும் மாணாக்கர்களின் பெயர், பெயரின் தலைப்பெழுத்து (Initial) மற்றும் பிறந்த நாள் (Date of Birth) போன்ற விவரங்களை **+2** மதிப்பெண் பட்டியலின்படியே பதிவேற்றம் செய்யப்படவேண்டும். அவ்வாறு, பதிவேற்றம் செய்யப்படும் பொழுது ஏதேனும் தவறுகள் ஏற்படின் அத்திருத்தத்திற்கான கட்டணத்தை கல்லூரி நிாவாகமே செலுத்தவேண்டும்.

மேலும், மாணாக்கர்களின் பெயர்கள், நுழைவுச் சீட்டு (Hall Ticket), பருவத்தேர்விற்கான பதிவுப்பட்டியல் (Galley), தேர்வு முடிவுகள் (Result) மற்றும் இதர தரவுகளில் ஏதேனும் தவறுகள் இருப்பின் அவற்றை உடனடியாக பல்கலைக்கழக தேர்வு நெறியாளருக்கு தெரிவித்து சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ள முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் அனைத்து மாணவர்களும் நடப்புப் பருவத் தேர்வு தாள்களுடன் "நிலுவைத்தாள்களையும்" எழுதக் கட்டாயம் பதிவு செய்திடல் வேண்டும்.**

அவ்வாறு நடப்புப் பருவத் தேர்வுக்குப் பதிவு செய்யத் தவறினால், அம்மாணவர்கள் அடுத்த பருவத் தேர்விற்கு பதிவு செய்ய இயலாத நிலை ஏற்படும். விடுபட்ட பருவத்தை மீளப் பயிலுதல் (Re-do) என்ற வகையில் ஆறு பருவங்களும் முடித்த பிறகு, படிக்க நேரிடும் என்ற தகவல் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், கல்லூரியில், முந்தைய பருவத் தேர்விற்குப் (எ.கா. இரண்டாம் பருவம் முதல் ஐந்தாம் பருவம் வரை) பதிவு செய்ய இயலாத மாணவர்கள், அடுத்து வரும் பருவத் தேர்விற்கு இணைய முகப்பில் (Exam Portal) பதிவுசெய்ய வேண்டுமெனில், பதிவாளரிடம் அனுமதியைப் பெற்ற பின்னரே பதிவுசெய்ய இயலும்.

மேலும், **தேர்வு இணைய முகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்யப்படும் மாணாக்கர்களின் பாடக்குறியீட்டு விவரங்கள் மற்றும் கட்டண விவரங்களைப் பதிவிறக்கம் செய்து, அனைத்து இளநிலை (B.A., B.B.A., B.Com., B.Lit., and B.Sc)** பாடவாரியாக **இணையத்தில் பதிவேற்றப்படும் கட்டண விவரங்களின் (Form–I) கூட்டுத்தொகையுடன், வங்கியில் செலுத்தப்படும் கட்டணத்தொகையை நேர்செய்து சுருக்கப்பட்டியலுடன் (Abstract)** பல்கலைக்கழக **இணையதள வங்கிக் கணக்கில் செலுத்திய ரசீது நகலையும் இணைத்து அனுப்பிவைக்க முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்**

கல்லூரியில் பயிலும் / தேர்வு எழுதும் மாணாக்கர்களின் வருகைப்பதிவு (Attendance) சதவீத விபரங்களை தேர்வு இணைய முகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்யவும் (Form - II, Form- III, Form – IV), மேலும், வருகைப்பதிவு சதவீத குறைவுக் கட்டண (Condonation Fee) விவரங்களுடன் இணையதள வங்கிக் கணக்கில் செலுத்திய ரசீதையும், தேவையானவர்களுக்கு மருத்துவச் சான்றிதழ் நகலையும் தேர்வு இணைய முகப்பில் (Exam Portal) பதிவேற்றம் செய்து அந்நகல்களுடன் வருகைப்பதிவுக் குறைவுடைய மாணாக்கர்கள் யாரும் இல்லாவிடில் **'வருகைப்பதிவுக் குறைவு இல்லை'** என்று துறைவாரியாக பட்டியலைத் தயாா் செய்து பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்க கல்லூரி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மேலும், பல்கலைக்கழக இணையதளத்தில் Academic > Regulations** பகுதியில் **வெளியிடப்பட்டுள்ள மாணாக்கர்களுக்கான கல்விக்காலம் (SPAN PERIOD) குறித்த தகவலில், 2019-2020ஆம் கல்வி ஆண்டுக்கு முன்னா் மீளச்சேர்க்கை / மறுசேர்க்கை (Re-do / Re-admission) மற்றும் மாற்றுச்சேர்க்கை (Transfer) அடிப்படையில் கல்லூரிகளில் சேர்ந்து பயின்ற மாணவர்கள் 30-06-2024-க்குள் தங்களின் படிப்பை முடித்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. இத்தகவலை கல்லூரி அறிவிப்புப்பலகையில் கட்டாயம் வெளியிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் அறிவுறுத்திலின்படி 2019 - 2020-ஆம் கல்வியாண்டிற்கு முன்னா் கல்லூரியில் பயின்று ஏதேனும் நிலுவைத்தாள்கள் இருப்பின் அம்மாணவர்கள் இத்தேர்விற்கு பதிவு செய்ய இயலாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

மேலும், **மாற்றுத் திறனாளிகளுக்குத்** தேர்வு எழுதுவதற்கு உதவியாளர் (Scribe) நியமனம் செய்தல் மற்றும் பகுதி-2 (Part-II) ஆங்கிலம் மொழிப்பாடத்திற்கு விலக்குப் பெற்றுள்ள விவரங்களுடன், அம்மாணாக்கர்கள் **குறித்த பட்டியலைத் தனியே அனுப்பிவைக்கவும்.**

**எக்காரணம் கொண்டும் இளநிலைப் பட்டப்படிப்பிற்கான (UG) தேர்வுக் கட்டணத்துடன் முதுநிலைப் பட்டப்படிப்பிற்கான் (PG) தேர்வுக் கட்டணத்தைச் சேர்த்துச் செலுத்தக்கூடாது. அவ்வாறு சேர்த்து அனுப்பினால் மாணவர்களுக்கான தேர்வு நுழைவுச்சீட்டு வழங்குவதில் காலதாமதமாகும் என தெரிவிக்கப்படுகிறது.**

இக்கடிதம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

**தேர்வு நெறியாளர் (பொ)**

**<u>இணைப்பு:</u>** Forms I, சரிபார்ப்புப் பட்டியல் மற்றும் மற்றும் அனைத்துவித படிவங்கள்

<u>நகல்</u>:
1. Conf. I
2. P.A to COE
3. Conf.II
4. Accounts Section
5. Comp. Section
6. Director, Informatic Centre, Bharathidasan University. Tiruchirapalli - 620 024
7. B.A., B.B.A., B.Com., B.Sc., பாடப்பிரிவுகள்

# Form1

Click the link to download Form 1

மைய எண்:

# பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி – 620 024

# நவம்பர் 2023 – தேர்வுகள்

**கல்லூரிகள் அளிக்கும் கடிதம், கட்டண விவரப் படிவங்கள் மற்றும் இணைப்பு குறித்த**

## சரிபார்ப்புப் பட்டியல்

கல்லூரி பெயர்:...........................................................................................

| வ. எண் | | விவரங்கள் | √ குறியீடு செய்யவும் |
|---|---|---|---|
| 1. | முதல்வரின் கடிதம் - தேர்வுக் கட்டண மொத்தத் தொகை மற்றும் வங்கி இணையதளக் கட்டண ரசீதுகளின் விவரத்துடன். | | |
| 2. | தேர்வுக் கட்டண விவரங்கள் குறித்த சுருக்கப்பட்டியல் (Abstract) | | |
| 3. | வங்கி இணையதளக் கட்டண ரசீது நகல் (Online Payment Receipt) | | |
| 4. | Form – I – ஆண்டுவாரியாக, பாடவாரியாக | | |
| | 4.1 | I - year | |
| | 4.2 | II - year | |
| | 4.3 | III – year | |
| | 4.4 | Private Candidates | |
| 5. | | Form – II – Condonation- List of Candidates with Fee | |
| 6. | | Form – III – Condonation- List of Candidates with Fee and Medical Certificate | |
| 7. | | Form – IV – Condonation- List of Candidates (Below 50% of Attendance) Re-do Candidates | |

அளிப்பவரின் கையொப்பம் பெறுபவரின் கையொப்பம்

தேதியுடன் தேதியுடன